**சுருக்கம்**

கலை மற்றும் பண்பாடு – நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிக கலைஞர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் – மாதந்தோறும் வழங்கப்பட்டுவரும் நிதியுதவியினை ரூ.1,500/–ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்.2) த்துறை**

அரசாணை (நிலை ) எண். 81 நாள். 26.04.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044, விஜய, சித்திரை 13

படிக்கப்பட்டது:–

1.அரசாணை (நிலை) எண்.2377, கல்வித் துறை, நாள்.05.10.1961.
2.அரசாணை (நிலை) எண்.1635, கல்வித் துறை, நாள்.18.09.1971.
3.அரசாணை (நிலை) எண்.1296, கல்வித் துறை, நாள்.11.07.1980.
4.அரசாணை (நிலை) எண்.1528, பொது (பல்வகை)த்துறை,நாள்.18.09.1989.
5.அரசாணை (நிலை) எண்.249, பொது (பண்பாடு)த் துறை, நாள்.02.03.1992.
6.அரசாணை (நிலை) எண்.153, தமிழ் வளர்ச்சி, பண்பாடு (பண்–2)த்துறை, நாள்.30.07.1996.
7.அரசாணை (நிலை) எண்.121, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலைய (பண்–2)த்துறை, நாள்.10.06.2006.

படிக்க:-

8.ஆணையர், கலை பண்பாட்டுத்துறை கடிதம் ந.க. எண்.3117/ஈ2/2011, நாள்.04.08.2011.

*****

**ஆணை:-**

நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிக கலைஞர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி நிதியுதவி பெற்று வரும் கலைஞர் இயற்கை எய்திவிட்டால் அவருடைய மரபுரிமையாளரான மனைவி / கணவருக்கு இந்நிதியுதவி மாற்றி வழங்கப்பட்டு வருகிறது. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நலிந்த கலைஞர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோர்களுக்கும் மாதந்தோறும் நிதியுதவி வழங்குவது தொடர்பான குழு அமைத்து ஆணையிடப்பட்டது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டத்தின்படி தெரிவு செய்யப்படும் நலிந்த கலைஞர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோர்களுக்கும் மாதந்தோறும் நிதியுதவியாக ரூ.75/– வழங்கி ஆணையிடப்பட்டது. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இந்நிதியுதவி ரூ.150/– ஆக உயர்த்தப்பட்டது. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இந்நிதியுதவி ரூ.250/– ஆக உயர்த்தப்பட்டது. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட

..2..

அரசாணையில் இந்நிதியுதவி ரூ.400/– ஆக உயர்த்தப்பட்டது. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இந்நிதியுதவி ரூ.500/– ஆக உயர்த்தப்பட்டது. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இந்நிதியுதவி ரூ.1000/– ஆக உயர்த்தப்பட்டது.

2. மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிக கலைஞர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தற்போது மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் நிதியுதவியினை ரூ.1,000/–லிருந்து ரூ.2,000/–ஆக உயர்த்தி வழங்குமாறு முதன்மைச் செயலாளர் / கலைப் பண்பாட்டு ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

3. கலை பண்பாட்டு இயக்கக ஆணையரின் கோரிக்கையினை நன்கு பரிசீலனை செய்து, நலிந்த கலைஞர்களின் வறிய நிலையினைக் கருத்தில் கொண்டு, நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் நிதியுதவியினை ஏப்ரல் 2013 முதல் ரூ.1,500/–ஆக (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) உயர்த்தி வழங்கிட அரசு ஆணையிடுகிறது.

4. இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> “2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – I திட்டத்தில் சேராதது – AA கலைஞர்களுக்கும் சிறந்த எழுத்தாளர்களுக்கும் ஊக்கமளித்தல் – 09 உதவித்தொகை – 01 நடப்புச் செலவிற்கான உதவித்தொகை”
> (து.தொ.கு. 2205 00 102 AA 09 14)

5. மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிக கலைஞர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று வரும் நலிந்த கலைஞர்களுக்கு உயர்த்திய வீதத்தில் நிதியுதவி வழங்குவதற்குரிய அதிகாரம் (Authorization) அளிக்குமாறு மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு உயர்த்திய வீதத்தில் நிதியுதவி வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கத்தக்க வகையில் நலிந்த கலைஞர் / மரபுரிமையினர் நிதியுதவி பெறும் கலைஞர்கள் பற்றிய விவரங்களை உடனடியாக மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18 அவர்களுக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் / கலை பண்பாட்டு ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. நலிந்த நிலையில் வாழும் கலைஞர்கள் நிதிநிலையில் முன்னேற்றம் இருப்பின் அறிக்கை ஒன்றினை ஆண்டுக்கொருமுறை சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிக கலைஞர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று வரும் நலிந்த கலைஞர்கள் / மரபுரிமையினர் பற்றிய விவரங்களை ஒவ்வொரு மாதமும் பத்தாம் தேதிக்குள் அரசின் இத்துறைக்கும், கலைப் பண்பாட்டு இயக்கத்திற்கும் தவறாது அனுப்பி வைக்குமாறு

..3..

அனைத்து மாவட்ட ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6 / கருவூல அலுவலர்கள் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 185/து.செ(க.மு) கல்வி–II/2013, நாள். 25.04.2013–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ரா.கண்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர்,
கலை பண்பாட்டு இயக்ககம், சென்னை–8.
தலைவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,சென்னை–28.
(கலைப் பண்பாட்டு ஆணையர் வழியாக)
உறுப்பினர்– செயலாளர்,
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை–28.
(கலைப் பண்பாட்டு ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
அனைத்து மண்டல உதவி இயக்குநர், கலைப் பண்பாட்டுத் துறை
(கலைப் பண்பாட்டு ஆணையர் வழியாக)
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18/35.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு/தெற்கு/வடக்கு), சென்னை–79/5/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
நகல்:-
ஆளுநரின் செயலாளர், ஆளுநர் அலுவலகம், கிண்டி, சென்னை–32.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
சிறப்பு நேர்முக உதவியாளர், நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
சிறப்பு நேர்முக உதவியாளர், பள்ளிக் கல்வி, விளையாட்டு
மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், நிதித் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, சென்னை–9.
தேசிய தகவல் மையம், சென்னை–9.
பதிவாளர், தமிழ்நாடு தகவல் உரிமை ஆணையம், தேனாம்பேட்டை, சென்னை–18.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்